பிரிவு 2, அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 1970–71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்.

(8) தகவல் கோரல்.

சென்னையில் பத்திரிகை நடத்தும் வடநாட்டு முதலாளியின் வீட்டில் மத்திய காவல்துறை நடத்திய சோதனை.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I want a change in the order of business. I want to get some information from the Hon. Chief Minister.

சென்னையில் பத்திரிகைகள் நடத்திக்கொண்டிருக்கும் ஒரு பெரிய வட நாட்டு முதலாளியின் வீட்டில் இந்த மாதம் 25-ம் தேதி சென்ட்ரல் போலீஸ் ரெயிட் செய்து சில ரிக்கார்ட்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. கல்கத்தாவில் உள்ள ஒரு கம்பனி சம்பந்தமான தவறுகள் சம்பந்தமாக நடைபெற்ற புலன் விசாரணையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையா? அது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி அது சர்க்காருக்குத் தெரிந்திருந்தால் அதைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடாமல் இருப்பதன் மர்மம் என்ன? அமைச்சரவைக்கும் இந்த முதலாளிக்கும் ஏதாவது தொடர்பு உண்டா.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனி உறுப்பினர் கேள்வியா?

THIRU P. G. KARUTHIRUMAN : As the Leader of the Opposition, I want to get some information by way of private notice question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பேரவைத் தலைவரிடம் அனுமதி பெற்றுத்தானே கொண்டுவரவேண்டும்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஒரு பெரிய 'ரெயிட்' நடந்திருக்கிறது. 'சென்ட்ரல் ப்யூரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்' நடத்தியிருக்கிறார்கள். அது தெரியாது இந்த அமைச்சரவை தூங்கிக்கொண்டிருக்கிறதா? அதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை தந்திருக்க வேண்டும். இவர்களுக்கு தெரியாமலா நடந்திருக்கிறது. ஏன் அதைப்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது இங்கு ஒரு பிரச்னையைக் கேள்விகளைப்போல் எழுப்பிச் சர்க்கார் தூங்கிக்கொண்டிருக்கிறதா, சர்க்காருக்குத் தெரியாதா என்றெல்லாம் கேட்டார்கள். அவர்கள் சொன்னார்கள், ஒரு வடநாட்டு முதலாளியின் இல்லத்தில் சோதனை நடைபெற்றது என்றும், ரெயிட் நடைபெற்று ரிக்கார்ட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அது சர்க்காருக்குத் தெரியாதா என்றும் கேட்டார்கள். அந்தத் தகவல் உண்மை. ஆனாலும்

அதில் நம்முடைய மாநிலத்தின் போலீஸ் துறைக்கும், அதற்கும் எந்தவித மான சம்பந்தமும் இல்லை. அவர்களே குறிப்பிட்டபடி, கல்கத்தாவி லிருந்து அவர்களுக்குத் தொடர்புள்ள ஒரு கம்பெனி சம்பந்தமாக சோதனையிடுவதற்காக Central Bureau of Investigation சி. பி. ஐ. அந்தக் காவல்துறையினர் அந்தச் சோதனையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது, இந்த மாநிலத்தின் காவல்துறைக்குத் தெரிவித்துவிட்டுச் செய்ய வேண்டிய அவசியமில்லை. சில விஷயங்களில் மத்திய அரசுக் காவல் துறை நேரடியாகச் சோதனை செய்யலாம் என்றிருக்கிறது. எனவே அதை இந்தச் சர்க்கார் இந்த அவைக்கோ, வெளியிலேயோ பிரக டனப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட பொறுப்பும் இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது. அவர்கள் கூறிய தகவல் உண்மை யாக இருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கத்திற்கும் எந்த முத லாளிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. திராவிட முன் னேற்றக் கழகத்திற்கும் முதலாளிகளுக்கும் சம்பந்தமில்லை என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அறிவார்கள் என்று நம்பு கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்தச் சர்க்காருக்குத் தெரியாமல் எது வேண்டுமானாலும் நடந்துகொண்டிருக்கலாமா ? அதை இந்தச் சர்க்கார் பார்த்துக்கொண்டிருப்பார்களா ? அமைச்சர்களையே கைது செய்வது போன்று எதாவது செய்தால்கூட பார்த்துக்கொண்டிருப்பார் களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசுக் காவல்துறை, இப்படிப்பட்ட சில விஷயங்களில், வெளிநாட்டு அந்நிய செலாவணி போன்றவைகளில் தவறுகள் நடந்திருந்தால் அவைகளிலே தலையிட இந்தச் சர்க்காரினுடைய அனுமதியைப் பெறவேண்டிய அவசிய மில்லாமலேயே தலையிடலாம். அந்த முறையிலே, வடநாட்டு முதலாளி என்று அவர்களுடைய வாயாலேயே வந்தது, அந்த வடநாட்டு முத லாளியிடம் சோதனையிட்டது உண்மை. அதைத்தான் சொல்லுகிறேன். ஆனால் இந்தச் சர்க்காருக்கும் அதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆகவேதான அதை அறிவிக்கவேண்டிய பொறுப்பும், அவசியமும் இந்தச் சர்க்காருக்குக் கிடையாது. அதை அறிவிகக வேண்டியது மத்திய அரசே தவிர நாங்கள் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகரவர்களே . . .

(9) நடைமுறைக் கேள்வி.—(அ) பேரவைத் தலைவரின் அனு மதியைப் பெறாமல் பேரவையில் ஒரு பிரச்சினையை எழுப்பியது குறித்து.

திரு. நா. வீராசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே எதிர்கட்சித் தலைவரவர்கள் ஒரு பிரச்னையை இப்போது இங்கு எழுப் பினார்கள். அவசரமும், பொது முக்கியத்துவம் வாய்ந்ததுமான அந்தப் பிரச்னையை இப்பொழுது கேட்பதாகச் சொன்னார்கள். நம்முடைய விதி 41-ன்படி அவசரமும், பொதுமுக்கியமும் வாய்ந்த பிரச்னையை எழுப்பவேண்டுமென்றால் தங்கள் அனுமதியைப் பெற்று எழுப்ப வேண்டும், அந்த அறிக்கையை வெளியிடவேண்டும். இப்பொழுது எழுப்பப்பட்ட இந்தப் பிரச்னைக்கு எந்த விதிமுறை இடம் அளிக்கிறது என்பதையும், அது முறைதானா என்பதையும், அதற்கு அவைத் தலைவரவர்கள் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின் றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனி உறுப்பினர் கேள்வி என்று ஒன்றிருக்கிறது. அதுகூட, சட்டமன்ற விதிமுறைகளில் இடம் பெற வில்லை. ஆனாலும் நாம் அனுமதிக்கிறோம். தனி உறுப்பினர் கேள்வி கேட்கும் முறைக்கு சட்டமன்ற விதிமுறைகளில் இடமில்லை. அப்படிக்